பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

21 09 2025 SUNDAY 12.40 PM

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1) பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.

2) தேசிய கல்விக்கொள்கையில் தாய்மொழி கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

3) போதைப்பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்கும் நோக்கில், நாடு முழுவதும் நடைபெற்ற நமோ இளையோர் ஓட்டத்தில் பத்து லட்சத்திற்கும் அதிகமானோர் பங்கேற்றனர்.

4) இந்த ஆண்டின் கடைசி சூரியகிரகணம் இன்று நிகழ்கிறது.

5) சீன பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரமோத் பகத் பட்டம் வென்றார்.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<<<>>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.

அவரது உரை மாலை 5 மணிக்கு இடம்பெறுகிறது.

பிரதமரின் உரை ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனில் நேரலையாக ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

<<<<<<<<<>>>>>>>

மஹாளய அமாவாசை முடிந்து துர்கா பூஜை கொண்டாட்டங்கள் தொடங்குவதையொட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், துர்கா பூஜை நெருங்கிவரும் வேளையில், மக்களின் வாழ்வில் ஒளியும், மகிழ்ச்சியும் பெருக வாழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

துர்கா தேவியின் அருளால் அனைவரும் நல்ல ஆரோக்கியத்துடன் வலிமை பெறவும் பிரதமர் தமது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், துர்கா தேவியின் அளவற்ற அருளால் மக்கள் அனைவரது இல்லங்களிலும் வளமும், மகிழ்ச்சியும் பெருக வாழ்த்துவதாக கூறியுள்ளார்.

<<<<<<<<<<>>>>>>>

தேசிய கல்விக்கொள்கையில் தாய்மொழி கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

சென்னை ஐ ஐ டி-யில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், நாட்டில் பயிலும் 30 கோடி மாணவர்களில் 20 கோடி பேர் பள்ளி படிப்பை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

இவர்களில் சுமார் 30 சதவீதம் பேர் பிளஸ் டூ வரை கூட படிப்பை தொடருவதில்லை என்று குறிப்பிட்ட அவர், இந்த நிலையை மாற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக கூறினார்.

நாட்டின் வடபகுதியில் உள்ள காசி முதல், தென்பகுதியில் உள்ள தென்காசி வரை உள்ள மக்கள் ஒரே கலாச்சாரத்தை பின்பற்றுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு தர்மேந்திர பிரதான், தாய்மொழி கல்வியுடன் கூடுதலாக இரண்டு மொழிகளை பயில தேசிய கல்விக்கொள்கையில் வகை செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

தமிழகத்தை பொறுத்தவரை இருமொழி கல்வி என்பது அரசியல் நிலைப்பாடாக உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

சென்னை ஐ ஐ டி-யால் நடத்தப்படும் இரட்டை பட்டப்படிப்பு காரணமாக கிராமப்பகுதிகளில் உள்ள கல்லூரிகளில் இளநிலை பட்டப்படிப்பு படித்துக்கொண்டே சென்னை ஐ ஐ டி-யில் தரவு மேலாண்மை குறித்த படிப்புகளை பயில வகை செய்யப்பட்டிருப்பதாகவும் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

<<<<<<<<<<>>>>>>>

*தூய்மை இருவார பிரச்சார இயக்கத்தின் ஒரு பகுதியாக, போதைப்பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்கும் நோக்கில், நாடு முழுவதும் இன்று நடைபெற்ற நமோ இளையோர் ஓட்டத்தில் பத்து லட்சத்திற்கும் அதிகமானோர் பங்கேற்றனர்.*

*தில்லியில் மத்திய இணையமைச்சர் திரு ராஜ் பூஷன் சௌத்ரி இந்த ஓட்டத்தை தொடங்கிவைத்தார்.*

*நிகழ்ச்சியில் பேசிய அவர், போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் உடல் பருமன் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் இந்த ஓட்டம் நடத்தப்படுவதாக கூறினார்.*

*ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில், அம்மாநில முதலமைச்சர் திரு பஜன் லால் சர்மாவும், ஜோத்பூரில் மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத்தும் இந்த ஓட்டத்தை தொடங்கிவைத்தனர்.*

*மும்பையில் நடைபெற்ற ஓட்டத்தில் மகாராஷ்ட்ரா முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் திரையுலக பிரபலங்கள் பங்கேற்றனர்.*

*இதேபோன்று நாடு முழுவரும் 75 இடங்களில் ''நமோ இளையோர் ஓட்டம்'' நடைபெற்றதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.*

*<<<<<<<<<<>>>>>>>*

*இந்த ஆண்டின் கடைசி சூரியகிரகணம் இன்று நிகழ்கிறது.*

*இந்த கிரகணம் இரவு மணி 10.59 -க்கு தொடங்கும் என்றும், ஆஸ்திரேலியா, அண்டார்டிகா, நியூசிலாந்து, பிரேசில், இந்தோனேஷியா உள்ளிட்ட நாடுகளில் இதனை காணலாம் என்றும் இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் திரு த வி வெங்கடேஷ்வரன் தெரிவித்துள்ளார்.*

*(voice Byte - த வி வெங்கடேஷ்வரன் – 44 Sec.)*

*<<<<<<<<<<>>>>>>>*

*இந்திய திரையுலகின் மிக உயரிய விருதாக கருதப்படும் தாதா சாஹேப் பால்கே விருது தமக்கு வழங்கப்படுவது வருங்கால தலைமுறையினருக்கு உத்வேகம் அளிப்பதாக இருக்கும் என்று நடிகர் மோகன்லால் தெரிவித்துள்ளார்.*

கொச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமக்கு அளிக்கப்பட்டுள்ள இந்த அங்கீகாரத்தை ஏற்றுக்கொள்வதாக குறிப்பிட்டார்.

திரையுலகம் மேலும் பல சிறப்புகள் பெற விரும்புவதாகவும் திரு மோகன்லால் தெரிவித்தார்.

<<<<<<<<<>>>>>>>

ஜார்கண்ட் மாநிலத்தில் பழங்குடியினராக அறிவிக்கக்கோரி போராட்டத்தை நடத்திவந்த குர்மி சமுதாயத்தினர் மத்திய அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து தங்களது போராட்டத்தை விலக்கிக்கொண்டுள்ளனர்.

குர்மாலி மொழியை எட்டாவது அட்டவணையில் சேர்க்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இவர்கள் போராட்டம் நடத்தி வந்தனர்.

இந்நிலையில், மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா அளித்த உறுதிமொழியின்பேரில் போராட்டத்தை விலக்கிக் கொள்வதாக போராட்டக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

<<<<<<<<<>>>>>>>

பீகாரில் ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்கான நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் விகாஷ் மித்ரா மற்றும் சிக்ஷா சேவகர்கள் Tablet எனப்படும் கையடக்க கணினி வாங்க 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு நிதிஷ்குமார் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், விகாஷ் மித்ராக்களுக்கான மாதாந்திர பயணப்படி ஆயிரத்து தொள்ளாயிரம் ரூபாயிலிருந்து, 2 ஆயிரத்து 500 ரூபாயாகவும், எழுதுபொருள் படி தொள்ளாயிரம் ரூபாயிலிருந்து ஆயிரத்து 500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று, சிக்ஷா சேவகர்கள் ஸ்மார்ட் போன் வாங்குவதற்காக 10 ஆயிரம் ரூபாயும், கற்பித்தல் சாதனங்கள் வாங்குவதற்கான நிதியுதவி ஒரு மையத்திற்கு ஆண்டிற்கு 6 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்கப்படும் என்றும் திரு நிதிஷ்குமார் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<<<>>>>>>>

சட்டீஸ்கர் மாநிலத்தில் மதுபான முறைகேடு தொடர்பாக அம்மாநில பொருளாதார குற்றப்பிரிவு காவல்துறையினர் இன்று சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

மதுபான விற்பனையில் நடைபெற்றதாக கூறப்படும் சட்டவிரோத பணப்பரிவர்த்தனை தொடர்பாக, ராய்பூர், துர்க் மற்றும் பிலாஸ்பூர் மாவட்டங்களுக்கு உட்பட்ட பத்து இடங்களில் இந்த சோதனை நடைபெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ராய்பூரில் மட்டும் நான்கு இடங்களில் அதிகாரிகள் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

இதேபோன்று நிலக்கரி விற்பனையாளர்கள் வீடுகளிலும் சோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

<<<<<<<<<<>>>>>>>

தில்லியில் சட்டவிரோதமாக தங்கியிருந்த பங்களாதேஷ் நாட்டை சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தில்லியின் பல்வேறு பகுதிகளில் வெளிநாட்டினர் உரிய ஆவணங்கள் இன்றி தங்கியிருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் தில்லி தென்மேற்கு மாவட்ட காவல்துறையின் சிறப்பு புலனாய்வு குழுவினர் மேற்கொண்ட சோதனையில் கைது செய்யப்பட்ட இவர்களை பங்களாதேஷிற்கு திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக காவல்துறை செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் மீது ஹரியானா மாநிலம் குருகிராமில் வெளிநாட்டவர் சட்டப்பிரிவின்கீழ், வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சீன பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரமோத் பகத் பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 15-21, 21-19, 21-16 என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் Muh Al Imran-னை வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் நித்யஸ்ரீ சுமதி சிவனும் பட்டம் வென்றார்.

இறுதியாட்டத்தில் அவர், 21-14, 21-11 என்ற செட் கணக்கில், சீனாவின் Lin Shuangbao-வை வென்றார்.

----------------

உலக ஸ்பீட் ஸ்கேட்டிங் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அனந்த்குமார் வேல்குமார் தங்கப் பதக்கம் வென்றார்.

*சீனாவில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் 42 கிலோமீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*பிரிஸ்பேனில் நடைபெற்று வரும் 19 வயதுக்குட்பட்டோருக்கான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் ஆஸ்திரேலியா சற்றுமுன் வரை 43 புள்ளி நான்கு ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 167 ரன் எடுத்துள்ளது.*

*<<<<<<<<<<END>>>>>>>>*